சுற்றறிக்கை - 05/01

எனது இல. என்சுபி/சிஓ/திட்-2
கூட்டுறவுத் திணைக்களம்,
திருகோணமலை.
20.12.2001

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

## கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 58 ம் பிரிவின் கீழ் ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் தொடர்பாக நடுத்தீர்ப்பாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்

1. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 58 ம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகளை விசாரிக்கும் நடுத்தீர்ப்பாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணங்கள் 01.01.2002 ந் திகதி முதல் பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகின்றது.

1. 

| பிணக்குகளின் தொகை | கட்டணம் |
|---|---|
| 5000/- வரை | 750/- |
| 5001/- - 10000/- வரை | 1500/- |
| 10001/- - 25000/- வரை | 2000/- |
| 25001/- - 100000/- வரை | 2500/- |
| 100001/- - 250000/- வரை | 3250/- |
| 250001/- - 500000/- வரை | 4500/- |
| 500001/- இற்கு மேல் | 6500/- |

2. சகல விதமான கடன் பிணக்குகளுக்கும், நடுத்தீர்ப்பாளர் கட்டணமாக 300/- வழங்கப்படும்.

3. சகல விதமான பிணக்குகளின் விசாரணைகள் தொடர்பாக ஏற்படும் தபால் காகிதாதி செலவுகளுக்கு 200/- இற்கு மேற்படாமல் வழங்கப்படும்.

2. பொதுப் பிணக்குகள்
தொகைகளும் தகைமைகளும்

2.1. ரூ. 5000.00 வரையிலான பிணக்குகள் :-
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "ஆ" பிரிவைச் சேர்ந்த 05 வருட சேவை அனுபவமுள்ள, பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர்.

2.2. ரூ. 5001.00 - 10000.00 வரையிலான பிணக்குகள்:-
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "ஆ" பிரிவைச் சேர்ந்த 08 வருட சேவை அனுபவமுள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் அல்லது கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "அ" பிரிவைச் சேர்ந்த 05 வருட சேவை அனுபவமுள்ள ஒருவர்.

2.3. ரூ. 10001.00 - 25000.00 வரையிலான பிணக்குகள்:-
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "அ" பிரிவைச் சேர்ந்த 10 வருட சேவை அனுபவமுள்ள உத்தியோகத்தர் ஒருவர்.

2.4. ரூ. 25001.00 - 100000.00 வரையிலான பிணக்குகள்:-
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 1 பிரிவில் உள்ள ஒருவர் அல்லது கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 11 "அ" பிரிவில் 15 வருடசேவை அனுபவமுள்ள ஒருவர்.

2.5. ரூ.100001.00 - 250000.00 வரையிலான பிணக்குகள்:-
கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் 1 பிரிவில் 05 வருட சேவை அனுபவமுள்ள ஒருவர்.

2.6. ரூ.250001 - 500000.00 வரையிலான பிணக்குகள்:-
இலங்கை நிர்வாக சேவையில் உள்ள ஒருவர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவியில் உள்ள ஒருவர், அல்லது மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர்.

2.7. ரூ.500001.00க்கு மேல் உள்ள பிணக்குகள்:-
இலங்கை நிர்வாக சேவையில் உள்ள ஒருவர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவியில் உள்ள ஒருவர்.

3. கடன் பிணக்குகள்
தொகைகளும் தகைமைகளும்

3.1. ரூ.10000.00 வரையிலான பிணக்குகள்:-
கூட்டுறவுச் சங்க பரிசோதகர் தரம் 11 "ஆ" பிரிவில் 03 வருட சேவையில் உள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர்

3.2 ரூ.10000.00க்கு மேல் உள்ள பிணக்குகள் :-
கூட்டுறவுச் சங்க பரிசோதகர் தரம் 11 "ஆ" பிரிவில் 08 வருட சேவையில் உள்ள பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் அல்லது கூட்டுறவுச் சங்க பரிசோதகர் தரம் 11 "அ" பிரிவில் 05 வருட சேவையில் உள்ள ஒருவர்.

4. தபால், காகிதாதி செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5. நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கும்போது அல்லது சிபாரிசு செய்யும்போது அவர்களது திறமை, நேர்மை, ஆற்றல் என்பன உங்களால் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

6. ரூ. 25000 வரையான பிணக்குகள் உங்களாலேயே நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம். ரூ. 25000 க்கு மேற்பட்ட பிணக்குகள் யாவற்றுக்கும் எனது சிபாரிசுக்கமையவே நடுத்தீர்ப்பாளர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

7. இவ்வாறு ஆற்றுப்படுத்தும் பிணக்குகள் நியமனத் திகதியிலிருந்து 03 மாதத்தினுள் குறிப்பிட்ட நடுத்தீர்ப்பாளரால் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும். கால நீடிப்புக்கோருமிடத்து நியாயமெனக் காணப்படின் நீடிப்பு வழங்கபபடலாம் அல்லது அவரது இடத்திற்கு பிறிதொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

8. நடுத்தீர்ப்பாளர் ஒருவரால் விசாரணை முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகள் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும் அவற்றின் தரம்பற்றி தங்களால் ஆராய்ந்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

9. நடுத்தீர்ப்புக் கட்டணமாக சங்கங்களிடமிருந்து பெறப்படும் வைப்புக்கள் யாவற்றிற்கும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதுடன் இதற்கான பேரேடு ஒன்றும் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

எனது சம இலக்கம் கொண்ட 1999.12.31ந் திகதியிடப்பட்ட 5/99ம் இலக்க மேற்படி விடயம் தொடர்பான சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

ஆ.சுப்பிரமணியசர்மா,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வ.கி).